விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 261 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 21 சனிக்கிழமை (06.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சந்நிதியானுக்கு இன்று தேர்



15ஆம் பக்கம் பார்க்க

# எல்லயில் பஸ் விபத்து
# 15 பேர் உயிரிழப்பு

## 7 பேரின் நிலை கவலைக்கிடம்

(பதுளை)

பதுளை மாவட்டம் எல்ல – வெல்லவாய வீதியில் 24ஆவது மைல்கல் அருகில் இடம்பெற்ற பஸ் விபத்தில் தங்காலை நகர சபை ஊழியர்கள் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 18 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## தங்காலை நகர சபையின் 12 ஊழியர்கள் பலி



15ஆம் பக்கம் பார்க்க

## பேருந்துடன் மோதிய ஜீப் சாரதி கைது



(கொழும்பு)

எல்ல - வெல்லவாய வீதியில் இடம்பெற்ற பேருந்து விபத்துத் தொடர்

02ஆம் பக்கம் பார்க்க

## உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு

### தலா 10 இலட்சம் ரூபாய்

(கொழும்பு)

எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் நேற்று முன்

02ஆம் பக்கம் பார்க்க

## 5 எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 5 எலும்புக்கூடுகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 44ஆவது நாள் அகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக நீதவான் எஸ்லெனின்குமார்

15ஆம் பக்கம் பார்க்க

## கால்கள் மடிக்கப்பட்டு என்புக்கூடு அடையாளம்



15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி அகழ்வு இன்றுடன் நிறைவு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு இன்று சனிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழிக்காக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் அனுமதித்த 45 நாட்கள் இன்று சனிக்கிழமையுடன் நிறைவு பெறவுள்ள நிலையில், அடுத்த வழக்கு விசாரணைகள் மற்றும்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராக பேராசிரியர் குமாரவடிவேல் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக, வாழ்நாள் பேராசிரியர் இ.குமாரவடிவேல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாகச் செயற்படும் வகையில், அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தச் சட்டங்களுக்கு அமை

15ஆம் பக்கம் பார்க்க

## பப்பாளித் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சச் சென்றவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

பப்பாளித் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சச் சென்ற ஒருவர் மயங்கி வீழ்ந்து நேற்று மரணமடைந்துள்ளார்.

மானிப்பாய் சுதுமலை தெற்குப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த முருகேசு விஜயமோகன் (வயது-63) என்பவரே உயிரி

15ஆம் பக்கம் பார்க்க

## புனித ஜோன் பொஸ்கோ சித்தி வீதத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வெளியாகியுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் சித்தி வீதத்தில் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயத்தில் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 225 மாணவர்களில் (இருவர் விசேட தேவையுடையவர்கள்) 140

15ஆம் பக்கம் பார்க்க

## திருவெண்காட்டில் இன்று தேர்

(மண்டைதீவு)

வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

காலை 7.45 மணிக்கு வசந்த மண்டபப்பூஜை இடம்பெற்று

02ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் ஐஸ் போதையுடன் கைதானவருக்கு ஆயுள் தண்டனை

(மன்னார்)

மன்னாரில் ஐஸ் போதைப் பொருள்களுடன் கைதான குற்றவாளி ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி மிஹறால் தலைமையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குற்றத்தின் பாரதூரத் தன்மையைக் கருத்தில் கொண்டு சந்தேக நபருக்கு எதிராக குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசத்தில் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருசாந்திக்கு செம்மணியில் நினைவேந்தல் நிகழ்வு

கடந்த 1996ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி குமாரசுவாமி கிருசாந்தியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு செம்மணி வளைவுப் பகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் "வாசலிலே கிருசாந்தி" எனும் கவிதை நூல் தொகுப்பும் வெளியிடப் படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

# தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்

(தையிட்டி)

தையிட்டியில் பொதுமக்களது காணியில் அடாத்தாக அமையப்பெற்றுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான பௌர்ணமி கவனயீர்ப்புப் போராட்டமானது இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

மீண்டும் பௌர்ணமி தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் போராட்டமானது மாலை 6.00 மணிவரை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே இம் மக்கள் போராட்டத்தில் அனைத்துப் பொதுமக்களும் கட்சிகளும் கலந்து கொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (ம-7)

## எல்ல...

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தங்காலை நகரசபை ஊழியர்கள் தமது குடும்பங்களுடன் சுற்றுலா சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தவேளை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இறந்தவர்களில் 9 பெண்களும் பஸ் சாரதி உள்ளிட்ட 6 ஆண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் 2 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

11 ஆண்களும் 7 பெண்களும் காயமடைந்த நிலையில் பதுளை மாவட்ட போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 5 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

சுற்றுலா சென்று திரும்பிக் கொண்டிருந்தவர்களை ஏற்றிச் சென்ற பஸ் 200 மீற்றர் பள்ளத்தாக்கில் வீழ்ந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பஸ் எதிரே வந்த ஜீப்புடன் மோதியதுடன், வீதிப் பாதுகாப்பு வேலியையும் இடித்து பள்ளத்தில் விழுந்துள்ளது.

பொலிஸார், இராணுவத்தினர், விமானப் படையினர், தீயணைப்புப் படையினர் மற்றும் அந்தப் பகுதி மக்கள் இணைந்து விபத்தில் சிக்கியவர்ளை மீட்டனர்.விபத்து நடந்த நேரத்தில் பஸ்ஸில் 35 இற்கும் மேற்பட்டோர் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது. பஸ் விபத்து நடந்த இடத்தில் இருந்த மோசமான நிலைமைகள் காரணமாக அந்தக் குழுவை மீட்கப் பெரும் முயற்சி எடுக்க வேண்டியிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, எல்ல பஸ் விபத்தில் காயமடைந்தவர்களில் 7 பேர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் என்று பதுளை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## உயிரிழந்த...

தினம் இரவு இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் வழங்க ஜனாதிபதி நிதியம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த விபத்தில் 15 பேர் வரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பேருந்துடன்...

பாக வாகன சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பேருந்து எல்ல திசையிலிருந்து வெல்லவாய திசை நோக்கி பயணித்த போது எதிரே வந்த ஜீப் வண்டியில் மோதி பள்ளத்தில் பாய்ந்து கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பாக குறித்த ஜீப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## திருவெண்...

தொடர்ந்து விசேட பூஜை வழிபாடுகளுடன் சித்தி விநாயகப் பெருமான் 10 மணியளவில் தேரில் ஆரோகணிப்பார். (ம-7)


### கொக்குவிலில் காணி விற்பனைக்கு

கே.கே.எஸ் வீதி, தலையாளி வைரவர் கோவிலுக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. 1 ½ பரப்பு காணி முழுமையாக 1 கோடியே 90 இலட்சம். (விலை பேசித் தீர்மானிக்கப்படும்) (C-3811)

077 784 0379

### தேவை

வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.
இடம் :- ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
(பகல், இரவு அல்லது பகல் மட்டும்) (5335)

077 7110 015

### காணி வீடு விற்பனை கொள்வனவு

யாழ்ப்பாணம், தீவகம், மண்டைதீவு, நயினாதீவு, கொழும்பு மற்றும் பலாலி, A9, K.K.S. பருத்தித்துறை வீதிகளிற்கு அருகில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். (1519)

076 311 9485


# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 1954.10.03

ஐங்கரன் அடியில் 2025.09.05

## துரைராஜசிங்கம் சேதுகாவலர்

### (நந்தினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - கண்டி)

காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கண்டி மற்றும் நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜசிங்கம் சேதுகாவலர் நேற்று 05.09.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை (முருகேசு) - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரகுநந்தனன் மற்றும் ரகுநந்தினி, நந்தகோபி ஆகியோரின் அன்புத் தந்தையும் து.நாகேந்திரம் (இலங்கை வங்கி), உமாதேவி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற திலகவதி (ஆசிரியை) மற்றும் ச. சிவபாதசுந்தரம் (அண்ணாச்சி சண் பான்சி, மட்டக்களப்பு) காலஞ்சென்ற நடராசா மற்றும் இந்திராதேவி, பாலசுப்பிரமணியம், இராசபூபதி (மலர்), மகேஸ்வரி, உதயலட்சுமி (ராணி) ஆகியோரின் மைத்துனரும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலேந்திரன் மற்றும் சுகிதா காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் திருஞானசம்பந்தன், சந்திரராசா ஆகியோரின் சகலனும் தங்கராசா, வசந்தகுமாரி ஆகியோரின் சம்பந்தியும் கிருஷ்ணராசாவின் (டுபாய்) மாமனாரும் அஞ்ஜனா, அன்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை தலையாழி ஒழுங்கை நாச்சிமார் கோவிலடியில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

958 / 34, தலையாழி ஒழுங்கை,
K.K.S. வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (5333)

தகவல்:
குடும்பத்தினர்
மனைவி - 076 462 3131
மகள் - 077 165 0778
மருமகன் கிருஷ்ணராசா - 077 114 4102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும்!

## பிரதி அமைச்சர் உறுதி

**(கொழும்பு)’ ..................................**

**பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என்று பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, “தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும், எல்லை நிர்ணய அறிக்கை சபையில் நிறைவேற்றப் படவில்லை.


எனவே, பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படுகின்றது.

இணக்கம் எட்டப்பட்டால் அது தொடர்பான சட்ட திருத்தம் சபையில் முன்வைக்கப்படும்.

தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை. அதனை நடத்தும் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்” என தெரிவித்துள்ளார். (நி)

# பிரேக் செயலிழந்ததாக கத்திய ஓட்டுநர்

## விபத்தில் தப்பியவரின் பரபரப்பு வாக்குமூலம்



(கொழும்பு)

எல்ல வெல்லவாய பள்ளத் தாக்கில் இருந்து பேருந்து விழுவதற்கு முன்பு அதன் பிரேக் செயலிழந்ததாக ஓட்டுநர் கத்தியதாகவும் அப்போது பயணிகள் அனைவரும் சிரித்ததாகவும் பேருந்தில் பயணித்த பயணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், விபத்து தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், “பேருந்து விழுவதற்கு சிறிது நேரத்திற்கு முன், பிரேக் செயலிழந்து விட்டதாக ஓட்டுநர் கூறினார். அப்போது நடத்துனர் உட்பட பயணிகள் அனைவரும் சிரித்தனர்.


சில பயணிகள், ஓட்டுனரை பார்த்து பொய் கூற வேண்டாம் எனவும் கூறினர். அதனையடுத்து, உண்மையில் பிரேக் செயலிழந்ததை பயணிகள் உணர்ந்துகொண்டனர்.

எதிரே வந்த வாகனத்துடன் மோதியே பேருந்து கீழே விழுந்தது. அதன்பின்னர், நான் இறந்து விடுவேன் என நினைத்தேன். வைத்தியசாலையில் கண் விழிக்கும் போதே உயிருடன் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் எனக்கு சுயநினைவு இருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றிணைவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு



(கொழும்பு)

இன, மத, சாதி, வர்க்கம் மற்றும் கட்சி பேதங்களை கடந்து சகல மக்களும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பயணத்தில் ஒன்றிணைய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் எதிர்க்கட்சி தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளதாவது “நாட்டில் தற்போது நமக்கு இன்னும் பல சவால்கள் காணப்படுகின்றன. இந்த விடயங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு நாடாக நாம் 2028 முதல், ஆண்டுதோறும் 5.5 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த வேண்டியுள்ளன. இவ்வாறு இந்த கடனை செலுத்துவதற்கு, 2025, 2026 மற்றும் 2027 ஆகிய மூன்று வருடங்களிலும் குறைந்தபட்சம் 5 சதவீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தை பேணிச் செல்ல வேண்டும்.

உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் கணித்துள்ளதன் பிரகாரம், இக்காலப் பிரிவுகளில் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்த மட்டத்திலேயே அமையும் என வெளிக்கொணரப்பட்டுள்ளது.

எனவே, அனைவரும் இன, மத, சாதி, வர்க்கம் மற்றும் கட்சி பேதங்களை கடந்து சகல மக்களும் இப் பயணத்தில் எந்தவித பாகுபாடும் இல்லாமல் இணைந்து கொள்ள வேண்டும்.

5 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை பேணிச் செல்ல முடியாதவிடத்து 2022 இல் ஏற்பட்ட நிலைமை மீண்டும் 2028 இல் ஏற்படும். இதனால் மக்களும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டி ஏற்படும். அவ்வாறு நேர்ந்தால் மோசமான துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும்” இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (நி)

# விரிவுரையாளர்கள் பற்றாக்குறை குற்றச்சாட்டு முன்வைப்பு

(கொழும்பு)

சுமார் 13,000 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டிய இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்பில் தற்போது 6,500 விரிவுரையாளர்கள் மட்டுமே இருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் பேராசிரியர் பிரகீத் வீரதுங்க இதனை தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையில் உள்ள பல்கலைக்கழக கட்டமைப்பில் தற்போது ஐம்பது சதவீத விரிவுரையாளர்கள் பற்றாக்குறை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளில் சுமார் 1,500 விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக கட்டமைப்பை விட்டு வெளியேறியுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

பேராதனை பல்கலைக் கழகத்தில் மட்டும் சுமார் 150 விரிவுரையாளர்கள் வெளியேறியுள்ளதாகவும், பல பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற பீடங்களில் நிலைமை மோசமாக உள்ளதாகவும் பேராசிரியர் பிரகீத் வீரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சூழ்நிலை காரணமாக, பல பட்டப்படிப்புகளின் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் சிக்கல்கள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு போதுமான வசதிகள் மற்றும் சம்பளம் இல்லாததே இந்த நிலைமைக்குக் காரணம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ள பல சிக்கல்கள் குறித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கக் கூட்டமைப்பு தற்போது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது. (நி)

# அதிக விலைக்கு அரிசி விற்றால் 5 லட்சம் வரை அபராதம்

## நுகர்வோர் அதிகாரசபை அதிரடி

(கொழும்பு)

அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்களும் சட்டத்திற்கு இணங்கி வர்த்தமானி விலைகளைப் பராமரிக்க பொறுப்புடன் செயற்படுமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை கோரியுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையால், 2025 ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை முன்னெடுத்த சோதனைகள் ஊடாக நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மூலம் 211 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் நடத்தப்பட்ட மொத்த சோதனைகளின் எண்ணிக்கை 14,682 ஆகும். அதன்படி, அரிசி சந்தைகளில் 2,800 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் அதிக விலைக்கு அரிசி விற்பனை தொடர்பான 915 சோதனைகளும் அடங்கும்.

இந்த அரிசி சோதனைகள் தொடர்பாக நீதிமன்றங்களால் 95 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு அரிசி விற்பது நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒரு கடுமையான குற்றமாவதுடன், குற்றவாளிகளுக்கு குறைந்தபட்சம் 100,000 ரூபாய் முதல் 500,000 ரூபாய் வரை அபராதம் அல்லது ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச அபராதம் 500,000 ரூபாய் ஆவதுடன், நீதிமன்றங்களால் 5 மில்லியன் ரூபாய் வரை அபராதம் விதிக்க அதிகாரம் உள்ளது.

அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்களும் சட்டத்திற்கு இணங்கி வர்த்தமானி விலைகளைப் பராமரிக்க பொறுப்புடன் செயற்படுமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை கோரியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கடின பயிற்சியே வெற்றிக்கு வழி சமைக்கும்!

### வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**விளையாட்டு என்பது சாதாரணமான ஒரு விடயம் அல்ல; ஏனெனில் விளையாட்டுகளின் போது உடலை வருத்தித்தான் சாதனைகளைப் படைக்க முடியும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் தெரிவித்துள்ளார்.**



தேசிய ரீதியாக நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்ற புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

சிறிய ஒரு சோம்பேறித்தனம் அல்லது உடல் வலி தொடர்பான சலனம் இந்த போட்டிகளில் இருந்து பின்வாங்க செய்துவிடும். இவ்வாறான சூழ்நிலையில் தேசியமட்ட ரீதியில் இந்தப் பாடசாலையானது உடற்பயிற்சி போட்டியில் முதலிடத்தை பெற்று சாதனையைப் படைத்துள்ளது என்பது பெருமைக்குரிய விடயம்.

விளையாட்டுத் துறையாக இருக்கலாம் அல்லது ஏனைய இணை பாடவிதான துறையாக இருக்கலாம் அவற்றில் பெற்றோர் தங்களது பிள்ளைகளை இணைப்பதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில் தமது பிள்ளைகள் படிப்பில் கவனத்தை செலுத்த மாட்டார்கள் என்ற பயமே காரணம். அது ஒரு நியாயமான பயம்.

எனவே சாதித்த மாணவர்களே நீங்கள் கல்வியில் பெறும் பெறுபேறுகள் தான் நிச்சயமாக ஏனைய மாணவர்களையும் விளையாட்டுக்களில் பங்குபெற்ற செய் யக்கூடிய ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்று தெரிவித்திருந்தார். (3-104)

## தேசிய மட்ட மல்யுத்தப் போட்டியில் சாதனை படைத்த முல்லை. விநாயகபுரம்



முல்லைத்தீவு துணுக்காய் வலயத்திற்கு உட்பட்ட முல் லைத்தீவு விநாயக புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தற்காப்பு கலையில் தேசிய ரீதியில் வரலாற்றுச் சாதனை படைத்தது.

2025ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட மல்யுத்தப்போட்டி கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் இம் மாதம் 1 ஆம் திகதி வரை கம்பஹா உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் 56 மாணவர்கள் இடைநிலைப்பிரிவில் கலந்து கொண்டதுடன் மு/விநாயகபுரம் அ.த.க.பாடசாலை இரண்டு தேசிய மட்ட பதக்கங்களினை தனதாக்கியது.

மு/விநாயகபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த செ.யதுர்சன் மற்றும் க.லோஜினி ஆகியோர் வெண்கலப்பதக்கத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

மாகாணமட்ட போட்டியில் 30 பதக்கங்களினைத் தனதாக்கிய பாடசாலை கடந்த வருடம் தேசிய மட்ட போட்டியில் ஒரு வெள்ளிப் பதக்கத்தினை வென்றமையும் குறிப்பிடத்தக்கது. (3-104)



அகில இலங்கை பாடசாலைக ளுக்கு இடையில் நடை பெற்ற உடற் பயிற்சி போட்டியில் முதலிடம் பெற்ற யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி மாணவர்களுக்கான கௌரவிப்பானது நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது.

(படம்- கஜிந்தன்)

## பிரதேசமட்ட விளையாட்டு நிகழ்வில் கருகம்பனை இந்து இளைஞர் முதலிடம்



35 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான தெல்லிப்பளை பிரதேச மட்டத்திலான இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு நிகழ்வுகள் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றிருந்தன.

தெல்லிப்பழை பிரதேச மட்டத்திலான 2025 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வுகளின் புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது இடத்தினை கருகம்பனை இந்து இளைஞர் கழக அணியினரும் இரண்டாம் இடத்தை கலைச் செல்வி இளைஞர் கழக அணியினரும் பெற்றுக்கொண்டனர். (3-33)

## சிறுவர்களுக்கான இலவச கிரிக்கெட் பயிற்சிகள்



யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர்களுக்கு கிரிக்கெட் மீதான விருப்பத்தை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 4:30 மணி யிலிருந்து 6 மணி வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் முற்றிலும் இல வசமான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

புலம்பெயர் லண்டன் வாழ் தமிழரும் யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவருமான கணன் தியாகராஜா அவர்களின் பூரண அனுசரணையில் இந்த பயிற்சிகள் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களால் வழங் கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுள்ள 5 வயது தொடக்கம் 13 வரையான பிள்ளைகள் முற்றிலும் இலவசமாக இதில் கலந்து கொள்ள முடியும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வச்சந்நிதி இரதோற்சவ சிறப்பு மலர் - 2025



## அபயம் செய்து எங்களை காவல் செய்ய அன்னதானக் கந்தன் தேரேறி வருகிறான்



இலங்கைத் திருநாட்டில் வடபுலத்தில் உள்ள தொண்டைமானாற்றங் கரையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் மிகப் பெரும் வரலாற்றைக் கொண்டது. வீரபாகு தேவர் சூரபத்மனிடம் தூது சென்ற போது தனது காவடியைக் கல்லோடை என்ற இடத்தில் பதித்துச் சென்றார்.

பின்பு திரும்பும் வேளை சந்திக்காலம் பூசை செய்யவேண்டி இருந்ததால் வல்லி ஆற்றங்கரையில் பூவரசு மர நிழலில் வேல் ஒன்றை வைத்துச் சந்திக்காலப் பூசை செய்து வழிபாட்டை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் சித்தர்களும் யோகிகளும், முனிவர்களும் தவம் செய்து முத்தியடைந்தனர் எனக் கருதப்படுகின்றது.

**"சிகண்டி முனிவரும் வெற்றிலை நுனியும்"**

தேவலோக கந்தர்வனான ஜராவசு வியாழ பகவானுடைய சாபத்தால் யானையாகக் கதிர்காமக் காட்டில் மதம் கொண்டு அலைந்து திரிந்தான். கதிர்காமக் கந்தனை வேண்டித் தவம் செய்து கொண்டிருந்த சிகண்டி முனிவரை இந்த யானை தாக்க வந்த போது சிகண்டி முனிவர் தனது கையில் இருந்த வெற்றிலையின் நுனியைக் கிள்ளி கதிர்காமக் கந்தனை நினைந்து யானை மீது வீசினார்.

**"வல்லியாற்றங் கரையில் சமாதி"**

அந்த வெற்றிலை நுனி வேலாக மாறி யானையைத் தாக்க அந்த யானை துடிதுடித்து வீழ்ந்தது. கந்தர்வனாக உருவெடுத்து தனக்கு முத்திதர வேண்டும் என வேண்டி நிற்க சிகண்டி முனிவரும் நீ வடபாலகெனு வல்லியாற்றங்கரையில் உள்ள கல்லோடைப் பகுதியில் தவம் செய்து முத்தியடை வாயாக எனப் பணித்தார்.

ஜராவசுவும் சிகண்டி முனிவர் கூறியவாறு வல்லியாற்றங்கரையில் உள்ள கல்லோடைப் பகுதியில் பூவரச நிழலில் தவம் செய்து சமாதியானார். இந்த இடத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கோயில் பல நூறு வருடங்களாகப் புகழ் பெற்ற வணக்கத்தலமாக இருந்து வருகின்றது.

**"மருதர் கதிர்காமரும் செல்வச் சந்நிதியும்"**

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும் பின்பு ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இந்த ஆலயம் ஒல்லாந்தர் காலப்பகுதியில் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் அமைக்கப் பட்டது.

**"அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைக்கும் வழிபாடு"**

முருகப்பெருமான் ஆற்றங்கரையில் ஆடு மேய்க்கும் சிறுவனாக காட்சி கொடுத்து ,நான் அறுபத்து மூவருடன் இங்கு வந்து எழுந்தருளியுள்ளேன். எனக்கு இந்த இடத்திலே ஆலயம் அமைத்து 65 ஆலம் இலைகளில் அமுது படைத்து என்னை வழிபட்டு வருபவர்களுக்கு அவ்வமுதை வழங்குவீராக எனக் கூறினார்.

இதைக்கேட்டு ஆச்சரியமடைந்த கதிர்காமர் எனக்கு மந்திரமோ பூசை முறைகளோ தெரியாது.நான் எவ்வாறு தங்களுக்கு பூசை செய்வேன் என்று கூற அவரைக் கணப்பொழுதில் கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டி,வாய் கட்டிப் பூசை செய்யுமாறு கூறி வேல் ஒன்றையும் வழங்கினார் என ஆலய புராணம் கூறுகிறது.

**"பூவரச மரமும் வேல்வழிபாடும்"**

ஆலயம் அமைந்துள்ள இடத்தில் இருக்கும் பூவரச நிழலிலேயே வீரவாகு தேவர் வேல் வைத்து சந்திக்காலப் பூசை செய்தார். முருகப்பெருமானும் கதிர்காமருக்கு முதலில் காட்சி கொடுத்தது பூவரச மரத்தின் கீழேயே எனக் கொள்ளப் படுகிறது.

**"வள்ளிக் கொடியும், கொடியேற்றமும்"**

முருகப்பெருமானுக்கு ஆவணிமாத பூரணையில் தீர்த்தம் இடம்பெறும் அதற்கு முன்வரும் அமாவாசை அற்றுப் போகும் தினத்தில் கோயில் கிணற்றுக்கு அருகே வள்ளிக் கொடி முளைப்பதோடு கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகும்.

**"சந்நிதியானின் திருத்தேர்"**

எண்கோண வடிவில் அமைந்த இந்தத் திருத்தேர் 32 அடி உயரம் கொண்டது. நூற்றுக்கு மேற்பட்ட சிற்பங்களையும் சந்நிதி வரலாறுகள்,மேல் விமானத்தில் 24 கந்தர்வ பொம்மைகள் பறக்கும் பாவனையில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகு மகோன்னதமான திருத்தேரில் எம்மை ஆள பவனி வருகின்றான்.

-மதுரகவி .காரை.எம்.பி.அருளானந்தன்.



### கூடமுடன் சந்நிதிக்கு வாருங்கள்

நெற்றியிலே மூன்றுகுறி நீறணிந்து பொட்டுமிட்டு
நம்முருகன் தேரூர வடம் தனை பிடிப்போம்
அற்புத கலைசெறிந்த இரதமேறி வருமழகன்
ஆறுமுக வேலவன் பேறுடைய காட்சி
பற்றோடு மயிலோனை புடைசூழும் பக்தரெல்லாம்
பக்குவமாய் கூடமேற்றி பத்துவிரல் கூப்பிநின்று
பொற்பதம் தொழுதெழவே பசி தீர்க்கும் கந்தனவன்
பயன்நூடு தகுவான் சந்நிதிக்கு வாருங்கள்.

"கலாபூசணம்"கே.ஆர்.திருத்துவராஜா.



### அழகுரதம் ஏறிவரும் சந்நீதியானே

ஆற்றக்கரை அமர்ந்த
எங்கள் அழகுத் தெய்வமே
அடியார் பசி போக்கிடும்
அன்னதானக் கந்தனே
போற்றி உன்னை
வழிபட்டோம் என்றும்
நாமுமே
அழகு ரதம் ஏறி
வரும் சந்நிதியானே

புலோலியூர் வேல்நந்தன்


### அன்னமிடும் கந்தனைப்போல் ஆறுபடை அமைந்திடுமோ..?

தந்தைக்குக் குருவாகித் தன்பெருமை வளர்த்த
சந்தனப் பிரியனெனும் செந்தில் திருக்குமரன்
சேரிளமை அலங்கார முருகனாம் தணிகையிலே
கோலஞ்செய் மணமகனாம் கடம்பனவன் குன்றினிலே.
பந்தமில்லா ஆண்டவனாய் பழனியுற்ற கந்தவேள்
பழமுதிர்ச் சோலையிலே மனைவிய ரிருவரானான்,
ஆறுபடை வீடமர்ந்த வள்ளிமண வாளனையாம்
மாறுபடாச் சிந்தனையாய் பூசித்தே புகழ்ந்திடினும்;
வருவோர்க்கு வரமாகப் பசி தீர்க்கும் வள்ளலாய்
அருள்மேவும் அன்னக் கந்தனெனும் பேரோடு
செல்வந்தரு செல்வச் சந்நிதியில் வாழுகின்ற
சேந்தனாம் வேற்பெருமான் அருளுக்கோர் ஈடில்லை!
தோற்றும் துயரறுத்துத் தோன்றாத பசி தீர்த்துக்
காத்திருந்து கருணை செய்யும் வேலனுக்கு நிகரேது..?

இரா.தில்லைராஜன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா நேற்றையதினம் பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப் பாணத்திலுள்ள அறிவுத் திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய், ஆஸ்துமா, சளி தொல்லை, இரத்த அழுத்தம். தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை, தைராய்டு பிரச்சினை போன்றவற்றில் இருந்து தீர்வு பெற எளிய முறை உடற் பயிற்சிகள். எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள் உயிர் வளத்திற்கான காய கல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்கு பெறலாம்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்த வருகை தந்துள்ள மனவளக் கலை பேராசிரியர் கே. சுப்பிரமணி அவர்கள் வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 0768571395 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

## சங்கடஹர சதுர்த்தி




(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 6.00 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபப்பூஜை நடை பெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறியத்தருகிறார். (8)

## புலமைப் பரிசில் பரீட்சை

# மன்னார் மாவட்டத்தில் லெசோடரன் முதலிடம்



(மன்னார்)

2025 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் மன்னார் மாவட்டத்தில் மன்/கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலய மாணவன் ச.லெசோடரன் 174 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். (8-285)

# முல்லை மாவட்டத்தில் பிளஸ்ணா எஸ்றி முதலிடம்



(நெளுக்குளம்)

2025 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்திவு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவி சி. பிளஸ்ணா எஸ்றி 180 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். (8-299)

# கனியமணல் அகழ்வுக்கு எதிராக 34 ஆவது நாளாகவும் போராட்டம்



(மன்னார்)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 34 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிரதான சுற்று வட்ட பகுதியில் ஒன்று திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் காற்றாலை கனியமணல் போன்ற அழிவுத் திட்டங்கள் மன்னார் மாவட்டத்துக்குள் இனியும் வேண்டாம் என்று ஒருமித்த குரலுடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில் மன்னார் ஜோசேவாஸ் கிராமத்தை சேர்ந்த மக்களும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் சிவப்பு நிற தலைப்பட்டிகளை அணிந்து பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் மக்களின் விருப்பத்துக்கு மாறாக திணிக்கப்படும் குறித்த செயற்திட்டங்களுக்கு எதிராக தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

அதே நேரம் மன்னார் மாவட்ட மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக வவுனியா வேப்பங்குள கிராம மக்களும் அவர்களுடன் வேப்பங்குளம் பங்குத் தந்தை அருட் சகோதரிகளும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் யா/ கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்வி அலுவலகப் பணிப்பாளர் திருமதி. மாலதி முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கந்தையா பிறட்லிஜெனாட், சிறப்பு விருந்தினராக கல்விக் காருண்யன் நாகரத்தினம், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் எஸ். ஜெ.சி. /87 அறக்கட்டளையின் இணைப்பாளர் தே. சுவீர்தன் ஆகியோர் கலந்த கொள்ளவுள்ளனர். (3)

# திடீரெனத் தீப்பற்றி எரிந்தது கார்



(தருமபுரம்)

கிளிநொச்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சி A9 பிரதான வீதியின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்று நேற்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. உடனடியாக அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த தீ விபத்தின் போது எவருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. காரின் ஒரு பகுதி மாத்திரம் தீயில் எரிந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316-104)

# முழுநிலாக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவ கோவிலடி சனசமூக நிலைய முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிமுதல் 6 மணிவரை சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் இரா.ஜெயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மறவன்புலவு க. சச்சிதானந்தன் "இன்றைய காலகட்டமும் சைவ ஆலயங்களும்" எனும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக்குழு கைது தொடர்பில் நாமல் கலவரமடைவது ஏன்?

## அமைச்சர் நளிந்த கேள்வி

(கொழும்பு)

இந்தோனேஷியாவிலிருந்து பாதாள உலக செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு கொண்டு வரப்பட்டமை சாதாரண விடயமல்ல. இந்த விடயம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ ஏன் கலவரமடைகின்றார் என்பது எமக்கு தெரியும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்தோனேஷியாவிலிருந்து பாதாள உலக செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு கொண்டு வரப்பட்டமையை சாதாரணமாகக் கருத வேண்டாம். எமது குற்றப்புலனாய்வுப் பிரிவினர், இரு நாட்டு பொலிஸார், சர்வதேச பொலிஸ், இந்திய புல னாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட பல தரப்பினரின் அர்ப்பணிப்பான சேவைக்கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஐவரையும் நாட்டுக்கு கொண்டு வருவதென்பது சாதாரண விடயமல்ல. இதனை விட பாரிய குற்றங்கள் தொடர்பில் அறிந்திருப்பதால் நாமல் ராஜபக்ஷவுக்கு இது சாதாரண விடயமாக இருக்கலாம். எனவே இது அவர்களுக்கு சிறிய விடயமாக இருந்தாலும் நாட்டுக்கு பெரிய விடயமாகும். அடுத்த கட்ட விசாரணைகளில் வெளியாகவிருக்கும் தகவல்களில் இதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் உட்பட பலரது தகவல்களும் வெளியாகும்.

படிப்படியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அதற்கமைய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குற்றப்புலனாய்வு திணைக்களமும், பொலிஸாரும் மேலதிக தகவல்களை ஊடகங்களுக்கு வழங்குவர்.

சிலரது தனிப்பட்ட தகவல்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். இந்த விடயத்தில் நாமல் எதற்காக இந்தளவிற்கு கலவரம் அடைந்தார் என்பது எமக்குத் தெரியும். குற்றங்களுடன் தொடர்பற்ற எவரும் வீணாகக் கலவரம் அடையத் தேவையில்லை. மாறாக வேறு தகவல்கள் தெரிந்திருந்தால் அவற்றை பொலிஸாருக்கு வழங்குவது சிறந்ததாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**04,கலட்டி 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 07**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 07. கலட்டி முதலாம் ஒழுங்கையிலுள்ள இல 04 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **கணபதிப்பிள்ளை இராசதுரை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **குமாரசிங்கம் குகதாசனும் பெண் சுமதியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனமானது தங்களில் இரண்டாம் பெயரின் மாமியாராகிய கணபதிப்பிள்ளை இராஜதுரை பெண் அன்னம்மா என்பவருக்கு அவரது பெற்றோரால் சீதனமாகக் கொடுக்கப்பட்டிருந்ததென்றும். குறித்த அன்னம்மா அதனை தங்களில் 2 ஆம் பேருக்கு தரும் பொருட்டு 1991.04.18 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் 709 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிக் கொண்ட உயில் மூலம் வெளிப்படுத்தி கொண்டார் என்றும், அவ்விருப்பம் காரணமாக குறித்த ஆதனம் தன்னை வந்தடைந்ததென்றும், தனது பிரசித்தமான ஆட்சியில் எதுவித கேள்வி தடை குறுக்கீடு எதுவும் இல்லையென்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 5628/12.02.2004 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

**கணபதிஐயா ஞானசேகரனும் பெண் வசந்தரூபியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5629/12.02.2004 ஆம் இலக்க உறுதியால் குறித்த **குமாரசிங்கம் குகதாசனும் பெண் சுமதியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர் :**"மூக்கவராயன்கலட்"**
இறை : **வட்டுக்கோட்டை மேற்கு தற்பொழுது வட்டு தென்மேற்கு**
விஸ்தீரணம்: **நில.பர 4 குளி 0.2**
எல்லைகள்: **கிழக்கு** - சற்குணம் பெண் புவனேஸ்வரியின் ஆதனமும், கலட்டி ஒழுங்கையும், **வடக்கு** - சுந்தரலிங்கத்தின் ஆதனம்,**மேற்கு**- சுப்பிரமணியம் மகள் சக்திதேவியின் ஆதனமும், சுப்பிரமணியம் மகள் சரஸ்வதியின் ஆதனமும் **தெற்கு**- சங்கரப்பிள்ளை பெண் சரோஜினிதேவியின் ஆதனமும், சற்குணம் பெண் புவனேஸ்வரியின் ஆதனமும்

குறித்த **கணபதிஐயா ஞானசேகரனும் பெண் வசந்தரூபியும்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய **ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கணபதிஐயா ஞானசேகரனும் பெண் வசந்தரூபியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர் ,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(5328)

## யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி தரம் 6 அனுமதி-2026

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 6 (2026) இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்படிவம் கோரப்படுகின்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை (2025) தோற்றியவர்கள் மட்டும் பாடசாலை நேரத்தில் (காலை 8.00- 1.00) விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம் 150.00 ரூபாவினை செலுத்தி பெற்றுக் கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் **பதிவுத் தபாலில் மட்டுமே** அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி **15.09.2025**
விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி **30.09.2025**
விண்ணப்படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி
**அதிபர், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

காலதாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு :- **கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர் முகத் தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.**

(C-3809)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1983- இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி-பா-14
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: A/L,Driver(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15548

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:பூசம் 1இல் செவ்
கி-பா-22 1/2
உயரம் :5'7"
தகைமை/தொழில்-BIT,Teacher
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/15550

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்:மகம் 8இல் செவ்
கி-பா-67 1/2
உயரம் :5'6"
தகைமை/தொழில்: IT, Supervisor (சுவிஸ்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15551

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 12 இல் செவ்
உயரம்:5'9"
தகைமை/
தொழில்:BSc,MSc,PHD,Researcher
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/15552

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்:உத்தராடம் 12 இல் சூரி செவ்
கி-பா-11
உயரம்:5'7"
தகைமை/தொழில்: BBM,MA
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15554

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி-பா-10 1/4
உயரம் : 5'5"
தகைமை/தொழில்:Accountant (GERMAN)
எதிர்பார்ப்பு:German,Swiss
தொ.இ: G/15557

பிறப்பு-1972-இந்து
நட்சத்திரம்:சித்திரை
உயரம் :5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/15561

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:பரணி
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: Account Course
எதிர்பார்ப்பு:வெளிநாடு,தொழில்
தொ.இ: G/15565

பிறப்பு -1986 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1இல் செவ்
உயரம் :5'4"
தகைமை/தொழில்: BSc,Nurse
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/15568

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:மூலம்
கி.பா:52 1/4 1 இல் செவ்
உயரம் :5'2"
தகைமை/தொழில்:BCom,MBA
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: G/15570

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்யா, சீனாவை எதிர்கொள்ள இராணுவத்தை தயார் செய்யுங்கள்

### பென்டகனுக்கு ட்ரம்ப் உத்தரவு



(வோஷிங்டன்)

ரஷ்யா, சீனாவை எதிர் கொள்ள இராணுவத் தயார் நிலையை கணிசமாக அதி கரிக்க அமெரிக்கப் பாதுகாப் புத்துறைக்கு (பென்டகன்) அந்நாட்டு ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக, முந்தைய நிர்வாகத்தின் பலவீனமான கொள்கைகள் காரணமாக ரஷ்யாவும் சீனாவும் நெருக் கமாகிவிட்டன.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த 80 ஆவது ஆண்டு நிறை வைக் குறிக்கும் வகையில் சீனாவின் பீஜிங்கில் பிர மாண்டமான இராணுவ அணிவகுப்பு நடைபெற் றது. இந்த அணிவகுப்பை சீன ஜின்பிங்குடன் ரஷ்ய ஜனாதிபதி புடின் மற்றும் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோர் பார் வையிட்டனர்.

அமெரிக்காவிற்கு எதிராக சீனா, ரஷ்யா மற்றும் வடகொரியா இணைந்து சதி செய்வதாக ட்ரம்ப் நேர டியாக குற்றம் சாட்டினார்.

சீனா, ரஷ்யா, வட கொரியா மூன்று நாடுக ளுக்கும் இடையிலான பிணைப்பு அமெரிக்காவிற்கு எதிராக வலுவடைந்து வரு வதற்கான அறிகுறி என்று வோஷிங்டன் நம்புகிறது.

அதனால்தான் ஜனாதிபதி ட்ரம்ப் இராணுவத்தை மீண் டும் கட்டியெழுப்பவும், தடுப்பு திறனை மறுசீரமைக்க தயாராக இருக்கவும் உத்தர விட்டுள்ளார். (நி)

## ஜோ பைடனுக்கு அறுவை சிகிச்சை

(வோஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அண்மையில் தோல் புற்று நோய்க்கான மோஸ் அறுவை சிகிச்சை செய்து கொண்டதாக அவரது ஊட கப் பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

மோஸ் அறுவை சிகிச்சை என்பது தோல் புற்றுநோய்க்கு சிகிச்சை யளிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு அறுவை சிகிச்சை நுட்பமாகும். இது மிகவும் துல்லியமானது, புற்றுநோய் செல்களை மட்டுமே அகற்றி, சுற்றியுள்ள ஆரோக்கியமான திசுக்க ளைப் பாதுகாக்கிறது.

2023 ஆம் ஆண்டில், வழக்கமான பரிசோத னையின் போது பைடனின் மார்பில் இருந்து புற்றுநோய் தோல் புண் அகற்றப்பட்டது.


மே மாதத்தில், அவ ருக்கு எலும்புகளுக்கு பரவி யுள்ள ஒரு தீவிரமான புரோஸ்டேட் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது.

"புற்றுநோய் நம் அனை வரையும் தொடுகிறது," என பைடன் அப்போது சமூக ஊடகங்களில் பதிவிட்டி ருந்தார்.

பைடன் ஜனாதிபதியாக வருவதற்கு முன்பு, கடந்த காலத்தில் மெலனோமா அல்லாத பல தோல் புற்று நோய்களையும் அகற்றி னார்.

ஜனவரி மாதம் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியதிலி ருந்து அவர் பொது இடங்களுக்கு பெரும்பா லும் வருகை தருவதில்லை. மேலும் மிகக் குறைவா கவே பொது வெளியில் தோன்றியுள்ளார்.

பைடன் தம்பதியினர் நீண்டகாலமாக புற்று நோயை எதிர்த்துப் போராடி குணப்படுத்துவதற்கு வலு வான ஆதரவாளர்களாக இருந்து வருகின்றனர். (நி)



## வளி மாசு பாட்டால் அதிகரிக்கும் உயிரிழப்புக்கள்

### உலக வானிலை அமைச்சு

(ஜெனீவா)

கடந்த ஆண்டு வளிமாசு பாட்டுக்கு காலநிலை மாற் றத்தால் அடிக்கடி ஏற்படும் காட்டுத்தீ சம்பவங்கள் கார ணமாக அமைந்துள்ளதாக உலக வானிலை அமைப்பு நேற்று வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளது.

சுற்றுப்புற வளி மாசுபாடு ஆண்டுக்கு 4.5 மில்லியன் அகால மரணங்களை ஏற்ப டுத்துவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள் ளது.

கடும் காட்டுத்தீ ஏற்படும் அமேசன் காடுகள், கனடா, சைபீரியா மற்றும் மத்திய ஆபிரிக்கா போன்ற இடங் கள் வளி மாசுபாடு ஏற்படும் இடங்களாக 2024 ஆம் ஆண்டிற்கான உலக வானிலை அமைப்பு அறிக்கை சுட்டிக்காட்டியுள் ளது.

புதைபடிவ எரிபொருள் உமிழ்வுகளால் ஏற்படும் புவி வெப்பமடைதல் வானிலை முறைகளை மாற்றுவதால், காட்டுத்தீ உலகம் முழுவதும் அடிக்கடி மற்றும் பரவலாகி வருகிறது. நிலக்கரி, எண் ணெய், எரிவாயு மற்றும் மரம் எரிப்பதாலும், போக்கு வரத்து மற்றும் விவசாயத் தாலும் உருவாகும் காற்றில் பரவும் துகள்களுடன் இது வும் இணைகிறது.

"காட்டுத்தீ தூசிகள் மாசுபாட்டிற்கு ஒரு பெரிய பங்களிப்பாகும், மேலும் காலநிலை வெப்பமடை கையில் இந்தப் பிரச்சினை அதிகரிக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது. இது உட்கட்ட மைப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு அதிக ரித்து வரும் அபாயங்களை ஏற்படுத்துகிறது," என உலக வானிலை அமைப்பு தெரி வித்துள்ளது. (நி)




## உலகப் புகழ்பெற்ற ஆடை வடிவமைப்பாளர் காலமானார்

(வத்திக்கான்)

உலகப் புகழ்பெற்ற இத் தாலிய ஆடை வடிவமைப் பாளர் ஜியோர்ஜியோ அர் மானி 91ஆவது வயதில் காலமானார்.

அவரது வீட்டில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை காலமானதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பேஷன் உலகில் அவர் அடி எடுத்து வைத்து 50 ஆண்டுகள் நிறை வடைந்ததை தொடர்ந்து மிலனில் இந்த மாதம் விழா கொண்டாடப்பட விருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி)




அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்தியாவுக்கு இரண்டு கார ணங்களுக்காக 50 சதவீத வரி விதித்துள்ளார். அமெரிக்காவுக்கு இந்திய தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு, தங்களிடம் இருந்து இந்தியா இறக்குமதி செய்வதில்லை. இதனால் மிகப் பெரிய வர்த்தக பற்றாக்குறை நிலவுகிறது என்று முதல் கார ணம் கூறப்பட்டது.

இரண்டாவதாக, ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதால், அந்த நிதியை பயன்படுத்தி கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுடனான போரை ரஷ்யா நீட்டித்து வருகிறது என ட்ரம்ப் குற்றம் சாட்டினார். இந்த இரண்டாவது காரணத்துக்காக, இந்தியா மீது கூடுதலாக 25 சதவீதம் என மொத்தம் 50 சதவீத வரியும்...

## ஆப்கானிஸ்தான... இறப்பு எண்ணிக்...

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தொலை தூர தென்கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு 5.6 ரிக்டர் அள விலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ஆறு நாட்களில் அங்கு ஏற்பட்ட மூன்றாவது நிலநடுக்கம் ஆகும்.

முதல் நிலநடுக்கத்தில் இறந் தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ரி விதிப்பு தேவையே!'

## ...ரஷ்ய - உக்ரைன் போரை நிறுத்த இந்தியா மீது வரி...

## அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் அந்நாட்டு அரசு வாதம்



ரம்ப்
கார
வரி
புக்கு
புமதி
ரிடம்
மதி
ரிகப்
றை
கார
விடம்
ச்சா
ால்,
த்தி
ான
ரை
என
இந்த
காக,
25
50

**(வோஷிங்டன்)..............**

**"உக்ரைனில் போரை நிறுத்துவதற்காகவே, இந்தியாவுக்கு வரி விதிக்கும் தேவை ஏற்பட்டது" என, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் ட்ரம்ப் நிர்வாகம், தெரிவித்துள்ளது.**

சதவீத வரி விதிக்கப்பட்டது. கூடுதல் வரியும் அமுலுக்கு வந்துவிட்டது.

இதனால் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு மட்டுமல்ல, இந்தியத் தயாரிப்புகளை நம்பி தொழில் செய்யும் ஏராளமான அமெரிக்க தொழில் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் ஜனாதிபதி ட்ரம்பின் உத்தரவை எதிர்த்து நியூயோர்க்கில் உள்ள சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், "வரி விதிப்பு உத்தரவுகள் அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரத்தை மீறியவை" என்று உத்தரவிட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து, "பெடரல் சர்க்யூட்" எனப்படும் சிறப்பு நீதிமன்றத்தை ட்ரம்ப் அரசு நாடியது. உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய ஒக்டோபர், 14 வரை அவகாசம் அளிக்கப்பட்டது.

அதன்படி, ட்ரம்ப் அரசு நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில், 251 பக்க மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது. அதில் கூறியிருப்பதாவது:

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரால் அமெரிக்காவில் தேசிய அவசரநிலை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்க பல லட்சம் கோடி ரூபாயை நாம் செலவு செய்கிறோம்.

எனவே, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்குவதற்காக இந்தியாவுக்கு எதிராக சர்வதேச அவசரநிலை பொருளாதார அதிகாரங்கள் சட்டப்படி ஜனாதிபதி ட்ரம்ப் வரி விதித்தார்.

இந்த வரி விதித்ததன் முக்கிய நோக்கம், உக்ரைனில் அமைதியை கொண்டு வருவதாகும்.

இந்த வழக்கு அமெரிக்காவின் நலனுக்கு மிகவும் முக்கியமானது. வரி விதிக்கும் அதிகாரத்தை மறுத்தால், அமெரிக்கா பாதுகாப்பு இல்லாமல் வர்த்தக பதிலடிக்கு ஆளாகும்.

இதனால் நாடு பொருளாதார அழிவின் விளிம்புக்கு தள்ளப்படும். என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

---

## ...ஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்
## ...ண்ணிக்கை 1,368 ஆக உயர்வு

லை
யில்
ழக்
அள
டது.
ங்கு
கம்
இறந்
கை
மது.

உள்ளூர் நேரப்படி வியாழக்கிழமை இரவு 08:56 மணிக்கு ஏற்பட்ட அண்மைய நிலநடுக்கத்தால் நங்கர்ஹார் மற்றும் குனார் மாகாணங்களில் உள்ள மக்கள் அச்சத்தில் தங்குமிடங்களை விட்டு வெளியேறினர்.

இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து உடனடி அதிகாரப்பூர்வ அறிக்கை எதுவும் இல்லை.

ஆனால், காயமடைந்த 17 பேர் குனார் மாகாண மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 1,368 பேர் உயிரிழந்தனர். மேலும் 2,180 பேர் காயமடைந்தனர் என்று 25 கிராமங்களின் அறிக்கைகளை மேற்கோள்காட்டி ஐ.நா. மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இப்பகுதியின் கரடுமுரடான மற்றும் மலைப்பாங்கான நிலப்பரப்பு மீட்பு மற்றும் பேரிடர் நிவாரணப் பணிகளுக்கு தொடர்ந்து இடையூறாக இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை 5.5 ரிக்டர் அளவிலான இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டதால், மீட்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

நிலச்சரிவுகளின் இடிபாடுகள் தொலைதூர கிராமங்களுக்கான அணுகலைத் துண்டித்ததால், பெரும்பாலும் மீட்பு பணிகள் ஹெலிகொப்டர்கள் மூலம் நடத்தப்பட்டன. இதனிடையே, ரஷ்யாவால் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானை தலிபான் அரசாங்கம் சர்வதேச உதவிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நா அவசர நிதியை வெளியிட்டுள்ளது. அதே நேரம், அனர்த்தத்துக்கு பதிலளிக்கும் விதமாக இங்கிலாந்து £1 மில்லியன் ($1.3 மில்லியன்) உதவியை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

இந்திய மற்றும் யூரேசிய டெக்டோனிக் தகடுகள் சந்திக்கும் பல பிளவுக்கோடுகளின் மேல் ஆப்கானிஸ்தான் அமைந்திருப்பதால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்

## மனக்கவலை நீங்கும்!



**கும்பம்: கிரகநிலை** - இராசியில் சனி , ராகு - பஞ்சம ஸ்தானத்தில் குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் சந்திரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து புதன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

15.09.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

16.09.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சூரியன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து புதன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்தக் காரியம் செய்தாலும் அதில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உடைய கும்ப இராசியினரே! நீங்கள் உழைப்பதற்கு அஞ்சாதவர். இந்த மாதம் நல்ல பலன்களைப் பெறுவதில் சிரமம் இருக்காது. வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும்.

எவ்வளவு திறமையுடன் செயற்பட்டாலும் காரிய தடங்கல் ஏற்படலாம். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும்.

தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஓடர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழு மூச்சுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். பயணங்களின் போது உடைமைகளை கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது.

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கான திட்டங்களை செயற்படுத்துவீர்கள். புதிதாக வீடு-மனை வாங்குவதற்கான வேலைகளைத் தொடங்குவீர்கள்.

பெண்களுக்கு மற்றவர்களின் பொறுப்புக்களை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. வீண் அலைச்சல் உண்டாகலாம்.

அரசியல்வாதிகளுக்கு தொண்டர்




களால் ஆதாயம் ஏற்படும். மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். மேலிடத்திலிருந்து மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும். கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும். வராமல் இழுபறியாக இருந்த பணம் வந்து சேரும்.

வேலைப்பளு காரணமாக குடும்பத்தை விட்டு பிரிந்து இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் முழு மூச்சுடன் ஈடுபடுவீர்கள். உங்களது பொருட்களின் மீது கூடுதல் கவனம் இருப்பது நல்லது.

**அவிட்டம் 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டும். ஆர்டர்கள் கிடைக்க அலைய வேண்டி இருக்கும். பணவரத்து இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**சதயம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். வாழ்க்கை துணையின் உடல் நலனில் அக்கறை தேவை.

சிறிய விடயங்களுக்கு கூட கோபம் வரலாம். அதனால் உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. விபரீத ஆசைகள் ஏற்படலாம். கவனம் தேவை.

**பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்:** இந்த மாதம் பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்களில் சாதகமான பலன் பெறுவீர்கள். உங்கள் பொருட்களை கவனமாக வைத்துக் கொள்வது நல்லது.

**பரிகாரம்:** விநாயகப் பெருமானை தேங்காய் தீபம் ஏற்றி வழிபடுவது காரிய தடைகளை போக்கும். நன்மை கிடைக்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 22, 23

**அதிர்ஷ்ட தினங்கள்:** 15, 16

## வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்!



**மீனம்: கிரகநிலை** - சுக ஸ்தானத்தில் குரு - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி, ராகு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து புதன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15.09.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சூரியன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து புதன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** குடும்பத்தில் அக்கறை காட்டும் மீன இராசியினரே! நீங்கள் கவலை, பயம் இல்லாமல் செயற்படக் கூடியவர். எல்லா விடயத்திற்கும் மனசாட்சியை நம்புபவர். இந்த மாதம் உங்களுக்கு நல்ல பலனை அள்ளித்தரும் நிலையில் இருக்கிறது. நீண்ட நாட்களாக இருந்து வந்த உடல் உபாதை மறையும். எல்லாவற்றிலும் இருந்து வந்த மனக் கவலை நீங்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல் நிலையில் கவனம் அவசியம்.

திட்டமிட்டபடி காரியங்களை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். எனவே எந்த ஒரு வேலையை செய்வதாய் இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை. தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணவரத்து இருக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் தாமதமாக கிடைக்கும். சக ஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும்.

உறவினர்கள் வருகை இருக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்களுக்கு திடீர் செலவு உண்டாகலாம். காரியங்களில் தடை தாமதம் ஏற்படலாம் கவனம் தேவை.

அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். எதிர்க்கட்சியினர் உதவுவார்கள். மறைமுக போட்டிகள் இருக்கும்.

தொண்டர்களின் உதவியுடன் செயலாற்றுவீர்கள். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உங்கள் உழைப்பினை தொடர்ந்து செய்வதன் மூலம் வெற்




றியை உங்கள் பக்கம் தக்க வைத்துக் கொள்ளலாம். மாணவர்கள் மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:** இந்த மாதம் விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. சந்திரன் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். பயணம் மூலம் இலாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்கள் நட்பு உண்டாகும். வாகனம் மூலம் இலாபம் வரும். அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் பல விதத்திலும் புகழ் கூடும். மற்றவர்கள் பிரச்சினைகளில் வாதாடி வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம் விரிவாக்கம் செய்ய தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். மேல் அதிகாரிகள் உதவி கிடைக்கும். சக ஊழியர் மத்தியில் இருந்து எதிர்ப்புகள் விலகும்.

**ரேவதி:** இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுப காரியம் நடக்கும். நிலம், வீடு மூலம் இலாபம் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். சுவையான உணவு கிடைக்கும். மனோ பலம் கூடும்.

**பரிகாரம்:** நவக்கிரகத்தில் குருவுக்கு நெய் தீபம் ஏற்றி வழிபட செல்வம் சேரும். கல்வியில் வெற்றி கிடைக்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** புதன் - வியாழன் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 24, 25, 26

**அதிர்ஷ்ட தினங்கள்:** 17, 18

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை தொடர்பான கலந்துரையாடல்; பாதியில் வெளியேறினார் அமைச்சர்

(மன்னார்)

**மன்னார் காற்றாலை தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் காற்றாலை வேண்டாம் என மக்கள் அனைவரும் ஒருமித்து எதிர்ப்பை தெரிவித்த நிலையில், அதில் கலந்துகொண்டிருந்த எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி அங்கிருந்து வெளியேறியுள்ளார்.**

மன்னார் தீவு பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் தொடர்பாக குறித்த பகுதி மக்களுடன் கலந்துரையாட எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி தலைமையிலான குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாரிற்கு வருகை தந்தனர்.

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் சௌத்பார் பகுதியில் 2 காற்றாலை கோபுரங்களும், தாழ்வுபாட்டில் 2 காற்றாலை கோபுரங்களும், தோட்டவெளியில் 2 காற்றாலை கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளது.

குறித்த காற்றாலை கோபுரங்கள் 20 மெகா வாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. மேலும், ஓலைத்தொடுவாய் பகுதியில் 06 காற்றாலை மின் கோபுரங்களும், பேசாலை மேற்கில் 2 காற்றாலை மின் கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளது.

இந்த 8 காற்றாலை மின் கோபுரங்களும் 50 மெகாவாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறிருக்க, குறித்த 5 கிராமங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து கிராம மக்களின் கருத்துக்களை கேட்டறிய எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தலைமையிலான குழுவினர் மன்னாரிற்கு விஜயம் செய்தனர்.

இந்நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் முதலாவது கலந்துரையாடல் மன்னார் சாந்திபுரம், சௌத்பார் கிராமங்களை உள்ளடக்கி சாந்திபுரம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது, அமைச்சருடன் அதிகாரிகள் வருகை தந்தனர்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், ரவிகரன், ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டதோடு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், உதவி அரசாங்க அதிபர் எம்.பிரதீப், மன்னார் நகர பிரதேச செயலாளர் கா.காந்தீபன், மன்னார் நகர சபையின் தவிசாளர் டேனியல் வசந்தன், அழைக்கப்பட்ட திணைக்கள பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மக்களுடன் கலந்துரையாடிய போதும் மக்கள் தமது கிராமங்களுக்குள் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் தேவை இல்லை எனவும் குறித்த காற்றாலை மின் கோபுரங்களை அமைக்க தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும், மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாலை மின் கோபுரங்களால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், கடற்றொழிலாளர்கள் தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும், தமது கிராம மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் காற்றாலை கோபுரங்களை மன்னார் தீவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததோடு, எமது பகுதிக்குள் காற்றாலை அமைக்க ஒரு போதும் அனுமதி வழங்க மாட்டோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

எனினும், அமைச்சர் தலைமையிலான குழுவினர் மக்களுடன் கலந்துரையாடி தமக்கு சாதகமான பதிலை எதிர்பார்க்க முயற்சி செய்த போதும் கலந்து கொண்ட அனைத்து மக்களும் தமது பகுதிக்குள் காற்றாலை வேண்டாம் என ஒருமித்து கூறியுள்ளனர்.

இந்தநிலையில், அமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து வெளியேறினர். குறித்த கலந்துரையாடல் குறித்து ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கருத்து கேட்ட போதும் எவ்வித பதிலும் அவரால் வழங்கப்படவில்லை. (8-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 350 | 200-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 190 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 150 | 120 | 200 |
| தக்காளி | 100 | 200 | 250 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 230 | 200 |
| கோவா | 320 | 280 | 300 | 220 | 300 |
| கரட் | 300 | 380 | 450 | 260 | 400 |
| பூசணி | 60 | 100 | 60 | 50 | 50 |
| புடோல் | 150 | 200 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 200-350 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 190 | 150 | 150 | 180 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 120 | 120 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 350 | 250 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 180 | 200 |
| பீற்றூட் | 150 | 80 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 280 | 300 |
| போஞ்சி | 600 | 500 | 500 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | - | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 70-100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 | 400-650 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 120-200 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 400 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 150 | 160 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

## இராசிபலன்

06.09.2025
ஆவணி 21, சனிக்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 1.42 மணி வரை
அவிட்டம் முன்னிரவு 11.42 மணி வரை

சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகுகாலம்9.04-10.34 மணிவரை
நடேசரபிசேகம், சித்தாமிர்தம்,
செல்வச்சந்நிதி தேர்

சந்திராஷ்டமம்
புநர்பூசம், பூசம்

**வளவன்**

**மேஷம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**துலாம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கோரிக்கைகள் நிறை வேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** பொது வாழ்வில் புகழ் கூடும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**ரிஷபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பிறர் உதவியுண்டு.

**சிம்மம்** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு , பொருளதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** குடும்பத் தேவைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், வாகன சுகமுண்டு ,பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மை யுண்டு.

**கும்பம்** சான்றோர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**கன்னி** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தொலை பேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், போசன நன்மையுண்டு.

**தனுசு** நேற்றைய பிரச்சினை ஒன்று நல்ல முடிவுக்கு வரலாம், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், போசன சுகமுண்டு.

**மீனம்** மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்வார்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மூட நம்பிக்கை கடவுள் மேலுள்ள அர்த்தமற்ற பயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்: சவால்களும் தீர்வுகளும்

## பகுதி 1

இலங்கையின் கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் நாய்கள் மனிதர்களின் வாழ்வோடு பிணைந்துள்ளன. அவை பாதுகாப்பையும் நட்பையும் அளிக்கின்ற போதும் தெருநாய்ப் பெருக்கம் பல்வேறு சுகாதார, சமூக மற்றும் விலங்கு நல பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது.

இதனால் நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது நாட்டின் முக்கிய முன்னுரிமையாகியுள்ளது.

**பிரச்சனையின் பரிமாணம்**

இலங்கையில் சுமார் மூன்று மில்லியன் நாய்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இதில் அரைபங்கு தெருநாய்களாகவும் (stray dogs) மிகுதி உடமையுள்ள நாய்களாகவும் ( own dogs) வாழ்கின்றன.

இதனுடன் தொடர்புடைய மிகப் பெரிய ஆபத்து விலங்கு விசர் நோய்/ வெறிநாய்க் கடிநோய் (Rabies) ஆகும். ஆண்டுதோறும் இலங்கையில் சுமார் 2 இலட்சம் நாய் கடி சம்பவங்கள் பதிவாகின்றன.

கணிசமான மனித உயிர்கள் நாய் ரேபீசால் இழக்கப்படுகின்றன.( வரும் வாரங்களில் இது தொடர்பாக விரிவாக எழுதுகிறேன்)

மேலும், தெருநாய்கள் வீதி விபத்துகள், மனிதர்களைக் கடித்தல், கால்நடைகளைத் தாக்குதல், நகரங்களில் குப்பை மேடுகளில் திரண்டு தாக்குதல் போன்ற பிரச்சனைகளை உருவாக்குகின்றன.

**பழைய அணுகுமுறைகள்**

முன்னைய காலங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் நாய்க் கொலை (culling) முறையை பயன்படுத்தின. நாய்களுக்கு விஷம் கொடுத்து எண்ணிக்கை குறைக்கப்பட்டது. பிடிக்கப்பட்டு கடலில் அமிழ்த்திக் கொல்லப்பட்டன.

ஆனால் இது மனிதாபிமானமற்ற நடவடிக்கை என விலங்குநல அமைப்புகள் கடுமையாக எதிர்த்தன. கொல்லப்பட்ட இடங்களில் மீண்டும் புதிய நாய்கள் குடியேறுவது வழக்கமாக இருந்தது.

இதனை உணர்ந்து, இலங்கை அரசு 2006-ஆம் ஆண்டு நாய் கொலை முறையை நிறுத்தி, அறிவியல் ரீதியான மனிதாபிமான அணுகுமுறையை தேர்வு செய்தது. (கருத்தடை மற்றும் தடுப்பூசி)

**தற்போதைய உத்தி: கருத்தடை மற்றும் தடுப்பூசி**


இன்றைய தினத்தில் இலங்கை அரசு விலங்கு பிறப்பு கட்டுப்பாடு (Animal Birth Control - ABC) முறையையும், ரேபிஸ் தடுப்பூசி முகாம்களையும் இணைத்து செயற்படுத்துகிறது: இது சுகாதாரத் திணைக்களத்தின் ரேபீஸ் கட்டுப்பாட்டு பிரிவு மூலம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

கருத்தடை சத்திரசிகிச்சைக்கு தனியார் கால்நடை வைத்தியர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். 2017-18 களில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இந்த பணியைச் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலத்தில் சத்திர சிகிச்சை நடைமுறைகளில் ஒரு தேக்க நிலை நிலவுகிறது.

( இது தொடர்பான விரிவான கட்டுரையை வரும் வாரங்களில் தருகிறேன்.) பெரும்பாலான நடவடிக்கைகள் தெரு நாய்களை இலக்கு வைப்பதில்லை. உரிமையாளர்கள் உள்ள நாய்களே மேற்படி செயன்முறைகளுக்கு உட்படுகின்றன.

**கருத்தடை**

நாய்களை அறுவை சிகிச்சை மூலம் நிரந்தரமாக இனப்பெருக்க மற்றதாக்குதல்.



இது படிப்படியாக தெருநாய் எண்ணிக்கையை குறைக்கிறது.

**தடுப்பூசி**

ஆண்டுதோறும் குறைந்தது 70% நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்ற அடிப்படையிலானது. இது WHO பரிந்துரைக்கும் அளவு. உரிமையாளர்களின் நாய்களுக்கு மாத்திரமே தடுப்பூசி வழங்கப்படுகிறது. தெருநாய்கள் புறக்கணிக்கப்படுவது மிகப் பெரிய குறையாகும்.

**விழிப்புணர்வு**

மக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி செலுத்துதல், நாய்களை கைவிடாமல் பராமரித்தல், தெருநாய்களை தத்தெடுக்கும் பண்பாட்டை ஊக்குவித்தல் ஆகியவற்றை முன்னெடுக்க அரசு மற்றும் சமூக அமைப்புகள் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றன.

இந்த நடவடிக்கைகள் மூலம் இலங்கை 2030க்குள் ரேபிஸ் இல்லாத நாடு ஆகும் என்ற இலக்கை நோக்கி செல்கிறது.

**நிலவும் சவால்கள்**

தடுப்பு நடவடிக்கைகளில் போதுமான பரவல் இல்லாமை: சில மாவட்டங்களில் விகிதம் மிகவும் குறைவாகவே உள்ளது.

கருத்தடைச் செயன்முறை நாட்டின் பொருளாதார நலிவு காரணமாகவும் கால்நடை வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாகவும் அண்மைக் காலத்தில் குறைவடைந்துள்ளது.

**பண்பாட்டு எதிர்ப்பு:**

சிலர் கருத்தடை தேவையற்றது என்று நம்புகிறார்கள்.

சமூகத்தில் உணவளிப்பு பழக்கம்: தெருநாய்களுக்கு உணவு அளிப்பது தொடர்ந்தாலும், தடுப்பூசி/கருத்தடை செய்யாமல் விட்டுவிடப்படுகிறது.

**கழிவு/குப்பை மேலாண்மைக் குறைபாடு:**

நகர குப்பை மேடுகள் நாய்களுக்கு உணவைத் தருகின்றன.

**ஒத்துழைப்பின் பின்தங்கல்:**

அரசாங்கம், உள்ளூராட்சி மன்றங்கள், மற்றும் விலங்கு நல அமைப்புகள் இடையே ஒருங்கிணைப்பு குறைவு. சுகாதாரத் திணைக்களத்தின் ரேபீஸ் கட்டுப்பாட்டு செயன்முறை வினைத்திறன் அற்றதாகவே உள்ளது. கால்நடை வைத்தியர்களை அவர்கள் பயன்படுத்தும் போது நிர்வாக ரீதியான சிக்கல்கள் ஏற்படுகின்றன.

**நிலையான தீர்வுகள்**

நீண்டகாலத்தில் நாய்ப் பெருக்கத்தை கட்டுப்படுத்த சமூக அடிப்படையிலான பலதரப்பட்ட அணுகுமுறைகள் தேவை:



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

அனைத்து மாவட்டங்களிலும் நிரந்தர/நடமாடும் அறுவைச் சிகிச்சை மையங்கள் அமைத்தல். குறிப்பாக அரச கால்நடை வைத்தியர் அலுவலகங்கள் கூடியளவு பங்களிப்பு செய்யும் வகையில் வலுப்படுத்தப்பட வேண்டும். தனியான பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும்.

மேற்படி ரேபீஸ் கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள் சுகாதார திணைக்களத்தை விட கால்நடை வைத்தியர்கள் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துக்கே பொருத்தமானது.

வளர்ப்பு நாய் பதிவு மற்றும் கைவிடுபவர்களுக்கு தண்டனை வழங்கும் சட்டங்கள். நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

மக்கள் மத்தியில் தத்தெடுப்பு கலாச்சாரம் உருவாக்கப்பட வேண்டும்.

கழிவு மேலாண்மை மேம்படுத்துதல் மூலம் நாய்களின் உணவு ஆதாரங்களை கட்டுப்படுத்துதல்.

அரசு-NGO-சர்வதேச அமைப்புகள் இடையே கூட்டுறவை வலுப் படுத்துதல்.

**முடிவுரை**

இலங்கையில் நாய்களைக் கட்டுப்படுத்தல் என்பது ஒரு விலங்கு நல பிரச்சனை மட்டுமல்ல அது ஒரு பொது சுகாதார, சமூக முன்னுரிமை. கருத்தடை மற்றும் தடுப்பூசி போன்ற மனிதாபிமான அணுகுமுறைகள் நாட்டை சரியான பாதையில் செலுத்துகின்றன.

ஆனால் போதுமான வளங்கள், சட்ட ஒத்துழைப்பு, மக்களின் பங்கு ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டியது அவசியம்.

கருணை, அறிவியல் மற்றும் பொறுப்புணர்வு மூன்றையும் இணைத்து செயற்பட்டால், இலங்கை விரைவில் ரேபிஸ் இல்லாத, மனிதர்-நாய் சமநிலையான நாடாக திகழும். இது தொடர்பான பல கட்டுரைகளை வரும் வாரங்களில் தருகிறேன். ஏனெனில் செப்டம்பர் மாதம் ரேபீஸ் மாதம்.செப்டம்பர் 28 சர்வதேச ரேபீஸ் தினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவது இல்லை.

*– அப்துல் கலாம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவர்களை வதைக்கின்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இல்லாதொழிப்போம் என அநுர குமார திஸாநாயக்க தரப்பு கூறியிருந்தது.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், பிரதமராகப் பதவியேற்ற ஹரிணியிடம் கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்பட்ட நிலையில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இல்லாது செய்வோம் என அவரும் கூறியிருந்தார்.

ஈற்றில் அது சாத்தியமில்லை என்றாகிவிட்டது.

அப்படியானால், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாற்றீடாக எந்தத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என்பதுதான் உண்மை.

ஆம், ஒரு காலத்தில் ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவி செய்யும் அடிப்படையில் அமுலுக்கு வந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, இப்போது பிரபல பாடசாலைகளில் மாணவர் அனுமதியைப் பெறுவதற்கான பரீட்சையாக மாறிவிட்டது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் மத்திய மகா வித்தியாலயங்களில் கல்வி கற்க வேண்டும் என்ற கொள்கை வலுவிழந்து போனதன் காரணமாக, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் நோக்கமும் திசை மாறலாயிற்று.

எதுவாயினும் இப்போது தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை என்பது மாணவர்களை வதைக்கின்ற பரீட்சையாக மாறிவிட்டது.

தவிர, குறித்த பரீட்சை காரணமாக பெற்றோர்களும் பதட்டமான மனநிலையில் இருப்பது தெரிகிறது.

ஆம், தரம் 5 புலமைப்பரிசில் என்பது பத்து வயதில் நடைபெறுகின்ற பரீட்சை. பத்து வயது என்பது மிகவும் மகிழ்வாகக் கற்க வேண்டிய காலம்.

ஆனாலும் தரம் 5 புலமைப்பரீட்சை என்ற நெருப்பாற்றைக் கடக்கின்ற பயிற்சியில் பத்து வயதுப் பிஞ்சுகள் பதைபதைத்துப்போய் விடுகின்றனர்.

ஓய்வு இல்லை, ஆன உறக்கம் இல்லை, விளையாட்டு இல்லை, மகிழ்வான நிகழ்வுகள் இல்லை என்ற சூழமைவில் பாடசாலை, ரீயூசன் என முழு நேரமும் படிப்பு... படிப்பு... என மாணவர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

இவ்வாறான கல்வி முறைமை பொருத்தமற்றது. இதனால் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்படுகின்றது என மருத்துவர்களும் கல்வியியலாளர்களும் கூறிவந்தாலும் அந்தப் பரீட்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாத அளவில்தான் இந்த நாட்டின் நிலைமை இருக்கிறது.

என்ன செய்வது 2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

அந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் சித்தியடைந்த – சித்தியடையாத மாணவர்கள் எனத் தரம் பிரித்து மாணவர்களைப் பேதப்படுத்தியுள்ளது.

இங்குதான் எங்களின் கல்வி முறைமை, தோல்விக்கான அடிக்கல்லை நாட்டி வைக்கிறது.

ஆக, இனியேனும் இதற்கு ஒரு முடிவு கட்டப்படாவிட்டால், எங்கள் மாணவர் சமூகத்தின் நிலைமை மிகவும் மோசமானதாகவே இருக்கும்.

# அரசியல் வாதிகள் வசமுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் பறிமுதல் செய்யத்திட்டம்

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் விஜேபால அதிரடி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட 51 உத்தியோகபூர்வ இல்லங்களைப் பறிமுதல் செய்து அவற்றைப் பொருளாதார செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த எதிர்ப்பார்த்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கறுவாத்தோட்டம் புதிய பொலிஸ் நிலைய கட்டிடத் திறப்புவிழாவில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர் நாட்டில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி நிலையத்தை நடத்திச் செல்வதற்காக இரண்டு பாக்கிஸ்தானியர்கள் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்தது.

இந்த நாட்டில் மிக நீண்டகாலமாகக் குற்றச் செயல்களுடனான கலாசாரம் காணப்பட்டது.

அந்தக் கலாசாரத்தால் தோற்றம் பெற்ற செயற்பாட்டாளர்களையே அண்மையில் கைது செய்தோம்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்குமிடையிலான தொடர்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மேலும் தீவிரமாக ஆராயப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் சட்டத்தின் ஊடாக எடுக்கப்படும். நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துவதற்காகப் பொலிஸாருக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றார்.(ம-7)

# சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு அமைச்சர்களுக்கு மாத்திரம் விதிவிலக்கா?

## நாமல் எம்.பி கேள்வி

(கொழும்பு)

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு அமைச்சர்களுக்கு மாத்திரம் விதிவிலக்காக்கப்பட்டுள்ளதா? என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (5) நடைபெற்ற பொதுமக்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, பாதாளக்குழுவினரைக் கைது செய்யும் போது நாங்கள் கலக்கமடையவில்லை. அதற்கான அவசியமும் எமக்கு கிடையாது. கைதுகளை வைத்து அரசியல் செய்யாதீர்கள் என்றே குறிப்பிட்டோம்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் நாளுக்கு நாள் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் அதனூடான மரணங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் அந் தப் பொதுக் கோட்பாடு அமைச்சரவை உறுப்பினர்களுக்கு மாத்திரம் விதி விலக்காக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன.

முறைப்பாடும் அளிக்கப்பட்டுள்ளன.

ஆனால் அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்போம்.

பல்வேறு கோரிக்கையை முன்வைத்து இலங்கை மின்சார சபை தொழிற்சங்கத்தினர் சட்டப்படி வேலை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

நாட்டில் மின்கட்டமைப்பு பாதிப்புக்குள்ளாகுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தான் பொறுப்புக்கூற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நுரைச்சோலை அனல் மின் நிலையம் ஸ்தாபித்த போது மக்கள் விடுதலை முன்னணியினர் தான் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

கடந்த அரசாங்கங்கள் மின்கட்டமைப்பை புதுப்பிக்க கொண்டு வந்த புதிய திட்டங்களுக்கு எதிராக செயற்பட்டார்கள். வீதிக்கு இறங்கிப் போராடினார்கள்.

இவ்வாறிருக்கையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கமைய இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் யோசனையையே தற்போதைய அரசாங்கம் செயற்படுத்துகிறது எனச் சாடினார். (ம-7)

# ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய இரதோற்சவம் இன்று

யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசகேசரி மன்னனால் நிர்மாணிக்கப்பட்டு பூஜிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிகு யாழ்ப்பாணம் - நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பிரம்மோற்சவப் பெருவிழாவின் 10ம் நாளான இன்று சனிக்கிழமை இரதோற்சவம் இடம்பெறவுள்ளது.

காலை 06.30 மணிக்கு விசேட வசந்த மண்டபப்பூஜை இடம்பெற்று ஸ்ரீ பஞ்சமுக விநாயகப் பெருமான் காலை 10.00 மணியளவில் சித்திரத் தேரில் ஆரோகணித்து திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு இன்னருள் பாலிக்கவுள்ளார்.

அதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் வசந்தமண்டபபூஜையைத் தொடர்ந்து பகல் 11.00மணியளவில் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (ம-7)

# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

## 5,167 பேர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 167 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 724 பேரும் சந்தேகத்தின் பேரில் 26 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 269 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 195 பேரும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 44 சாரதிகளும் கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 09 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 900 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 53

## மூடு பனி

சொக்கன்

உளவாளியாக வேலை பார்ப்பதில் த்ரில்மட்டுமில்லை நிறைய ஆபத்தும் உண்டு.

உள்ளூருக்குள் உளவு பார்க்கிறவர்கள் நிலைமைகூடக் கொஞ்சம் பரவாயில்லை. ஏதாவது பிரச்சினை என்றால் பெரிய அதிகாரிகள் தலையிட்டுக் காப்பாற்றிவிடுவார்கள். மிஞ்சிப்போனால் செய்தித்தாள்கள், தொலைக்கட்சி சௌனல்களில் கொஞ்சம் அசடு வழிய நேரிடும் அவ்வளவுதான்.

ஆனால் வெளிநாடுகளில் உளவாடச் செல்கிறவர்கள் அப்படியில்லை. பல சந்தர்ப்பங்களில் இவர்கள் திரட்டுகிற விடயங்கள் அந்த நாட்டின் பாதுகாப்புக்கு வேட்டு வைக்கக்கூடிய பரம ரகசியங்களாக இருக்கும். அப்பேர்ப்பட்ட தகவல்களைத் திருட்டுத்தனமாகக் கொத்திக் கொண்டு போகிறபோது மாட்டினால் தர்ம அடி ஜெயில் தண்டணை நிச்சயம் கொஞ்சம் கோபக்கார ஊர் என்றால் உயிருக்கே கூட ஆபத்து வந்துவிடும்.

இன்னொரு பிரச்சினை உளவாளிகள் எப்போதும் திரைமறைவில் செயற்படுகிறவர்கள். ஆகவே இவர்கள் ஏதாவது வம்பில் சிக்கிக் கொண்டால் தண்ணீருக்குள் மீன் அழுவது போல் அந்த விடயமே வெளியில் தெரியாது.

அப்படியே தெரிந்தால்கூட அவர்களுடைய சொந்த நாட்டிலிருந்து யாரும் அவர்களைக் காப்பாற்ற வருவது சந்தேகம்தான்.

ஆனால் இத்தனைக்குப்பிறகும் உலகம் முழுக்க உளவுக் கனவுகளோடு உலா வருகிற இளைஞர்கள் நிறையப் பேர். இதில் எவ்வளவுதான் ஆபத்து இருந்தாலும் அடுத்தவர்களால் முடியாததைச் சாதிக்கிற அந்தச் சவால் இவர்களுக்குப் பிடித்திருக்கிறது.


கூடவே கொஞ்சம் தேச பக்தியும் இவர்களை ரிஸ்க் எடுக்கத் தூண்டுகிறது.

மொசாட் தன்னுடைய ஏஜென்ட்களைத் தேர்ந்தெடுக்கும் போதே இந்த ஆபத்துக்களைப் பற்றித் தெளிவாகச் சொல்லி விடுகிறார்கள்.

உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வரக் கூடாதுங்கறதுதான் எங்களோட விருப்பம். நீங்க ரொம்ப நல்லா வேலை செய்யறதுக்குத் தேவையான எல்லாப் பயிற்சியையும் நாங்க உங்களுக்குக் கொடுப்போம் ரகசியமா மறைஞ்சு வாழுறது எப்படி அடுத்தவங்களுக்குச் சந்தேகம் ஏற்படாதபடி பேசி விடயத்தைக் கறக்கறது எப்படி உள்ளூர் ஆளுங்களைப் பயன்படுத்தித் தகவல்களைத் திரட்டுறது எப்படின்னு சகல விடயங்களையும் கத்துத்தருவோம். அதுக்கப்பறம் நீங்களும் இந்தக் குடும்பத்தில் ஒருவராகி விடுகிறீர்கள் உங்களை உலகத்தோட எந்த மூலைக்கு அனுப்பினாலும் அந்தப் பயணத்துக்குத் தேவையான பொய் வேடங்களில் ஆரம்பிச்சுப் பாதுகாப்பு ஏற்பாடுகள்வரை சகலத்தையும் செஞ்சு கொடுப்போம் உங்களுக்கு உதவறதுக்கு இங்கே எப்பவும் ஒரு டீம் இருக்கும் லேட்டஸ்ட் கருவிங்க வீடு, கார், நெட்வோர்க் எதிலும் குறை வைக்க மாட்டோம்.

ஆனா கடைசியில் களத்தில் இறங்கி வேலை செய்யப் போறது நீங்கதான். அதில எத்தனை ஆபத்து வந்தாலும் அந்த நிலைமைக்கு ஏத்தபடி செயற்பட்டு உயிர் பிழைச்சுத் திரும்பி வரவேண்டியது உங்க பொறுப்பு.

அதுக்கு ஏதாவது கூடுதல் உதவி தேவைன்னா நீங்க எங்களைக் கேட்கலாம் ஆனா பெரும்பாலும் அதற்கு வாய்ப்பு இருக்காது எங்கே போனாலும் உங்க சாமர்த்தியம்மட்டும்தான் உங்களுக்குத் துணை.



என்ன? பயமுறுத்துவதுபோல் இருக்கிறதா? மொசாட் தெரிந்தே தன்னுடைய ஏஜென்ட்களைப் படுகுழியில் தள்ளிவிடுவதைப் போல் தோன்றுகிறதா?

நிச்சயமாக இல்லை. உலக அளவில் வேறு எந்த உளவுத்துறையும் மொசாட்போலத் தனது உளவாளிகளைப் பாதுகாப்பது கிடையாது. அவர்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை என்றால் இஸ்ரேல் பிரதமர் ஜனாதிபதியில் ஆரம்பித்து இராணுவத் தலைவர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள்வரை ஒருவர் பாக்கியில்லாமல் அவர்களைக் காப்பற்றுவதற்குதான் முயற்சி செய்வார்கள்.

அதேசமயம் பொதுவாக மொசாட் கை வைக்கும் வேலைகள் எல்லாமே மிகவும் விவகாரமானவை என்பதால் மாட்டிக் கொள்கிறவர்களின் உயிருக்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

ஆகவே சில சந்தர்ப்பங்களில் இஸ்ரேலுக்கு வேற வழி இல்லை. மௌனமாகத் தனது சேவகர்களின் மரணத்தை ஏற்றுக்கொள்கிறது.

அதைவிடக் கொடுமை இதுபோன்ற மரணங்களைப்பற்றி அவர்களால் வெளிப்படையாகப் பேச முடியாது உயிர்த்தியாகம் செய்த உளவாளியின் படத்துக்கு மாலை போட்டு அஞ்சலிக் கூட்டம் கூட நடத்தமுடியாது. இவர்கள்தான் அந்த உளவாளியைத் தயார்செய்து அனுப்பிவைத்தார்கள் என்கிற விடயம் வெளியே தெரிந்துவிடும்.

ஆகவே மொசாட் தன்னுடைய உளவாளிகளைப்பற்றிய விவரங்களை வெளியே சொல்வதில்லை. அப்படியே சொன்னாலும் அவர்கள் எந்தெந்த வேலைகளில் ஈடுபட்டார்கள் அதில் வெற்றி அடைந்தார்களா அல்லது தோற்றப்போனார்களா என்பது போன்ற தகவல்களையெல்லாம் கவனமாக மறைத்துவிடுகிறார்கள்.

அவ்வளவு ஏன் ஒரு காலத்தில் மொசாடின் தலைவர் யார் என்கிற விடயம் கூடப் பரம ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது.

பிளாக் அண்ட் வொய்ட் சினிமாக்களில் வருவதுபோல் ஏஜென்ட் 157ஐ பெரிய பாஸ் கூப்பிடுகிறார் என்றுதான் சங்கேதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

தொடர்ந்து எப்போது அகழ்வது தொடர்பில் இன்றையதினம் நீதவான் திகதியிடுவார். (ம-7)

## கால்கள் மடிக்கப்...

செம்மணி மனிதப் புதைகுழியில் கால்கள் மடிக்கப்பட்டு இருத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் என்புக் கூட்டுத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதனைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப்பணிகளின்போது நேற்று முன்தினம் வியாழக்கிழமை குவியலாக எட்டு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவற்றைச் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்போது அவற்றுள் ஒரு மனித என்புக்கூட்டுத் தொகுதி கால்கள் இருத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் தெளிவான விளக்கத்தினைப் பெற யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மூத்த விரிவுரையாளர் ரமணராஜா புதைகுழிப் பகுதிக்கு அழைக்கப்பட்டு, அது தொடர்பிலான அவரது அவதானிப்புகள், விளக்கங்கள் கோரப்பட்டன.

அவர் தனது அவதானிப்பின்படி, இந்து முறைப்படி முறையாக அடக்கம் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை எனவும் என்புக்கூட்டின் கைகள் காணப்படும் நிலைமை உள்ளிட்ட காரணிகளால் அது முறையாக அடக்கம் செய்யப்பட்ட என்புக்கூடு இல்லை என தனது அவதானிப்பை வெளிப்படுத்தி இருந்தார்.

அதனை அடுத்து அது தொடர்பிலான விபரமான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் செ. லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார். (ம-7,33)

## 5 எலும்புக்கூடு...

மேற்பார்வையில்முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் 5 எலும்புக் கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கனவே இனங்காணப்பட்ட 11 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 11 எலும்புக் கூட்டுத் தொகுதியுடன் இதுவரையில் 235 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இதுவரையில் 240 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## சந்நிதியானுக்கு...

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் இரதோற்சவம் இன்று சனிக்கிழமை காலை இடம்பெறும். காலை 7.00 மணிக்கு முருகப்பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறும். (ம-7,60)

## யாழ்ப்பாணப்...

வாக ஜனாதிபதிக்கு உண்டான நிறைவேற்று அதிகாரத்தின் அடிப்படையில் வாழ்நாள் பேராசிரியர் இ. குமாரவடிவேல் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ்.குமநாயக்கவினால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதனின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிலையில் புதிய வேந்தராக வாழ்நாள் பேராசிரியர் இ. குமாரவடிவேல் கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாழ்நாள் பேராசிரியர் இ.குமாரவடிவேல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் மூத்த கல்வியியலாளராவார்.

பௌதிகவியல் துறையில் பேராசிரியராக விளங்கிய இவர், விஞ்ஞான பீடாதிபதியாகவும் பதில் துணைவேந்தராகவும் பதவி வகித்தவர்.

இவரது தகைசார் பங்களிப்பின் காரணமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினராகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## புனித ஜோன்...

மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று யாழ். மாவட்டத்தில் 63 சித்தி வீதத்துடன் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

செல்வி ஜெகநாதன் தீப்தி 187 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளார். அத்துடன் 222 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ம-7)

## நீர்...

ழந்தவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை (05) காலை பப்பாளித் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சச் சென்ற நிலையில் அவரைக் காணாது தேடிச் சென்றபோது அவர் மயக்கம் அடைந்த நிலையில் காணப்பட்டார்.

உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அவர்ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## மன்...

கிராம் தூய நிறையுடைய ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்த்தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர்.டி சில்வாவுடன் சட்டத்தரணிகளைக்

பாருக் ஆஜராகி இருந்தனர்.

வழக்குத் தொடுநர் தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் ஆஜராகி இருந்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் வழக்கு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. (ம-7,285)

## தங்காலை...

எல்ல - வெல்லவாய வீதியில் 24ஆவது கிலோமீற்றர் தூணுக்கு அருகில் நேற்று முன்தினம் (04) இரவு நடந்த பேருந்து விபத்தில் தங்காலை நகர சபையின்செயலாளர்டி.டபிள்யூ.கே. ரூபசேன உட்பட 12 ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர்.

சுற்றுலா சென்ற தங்காலை மாநகர சபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஏற்றிச் சென்ற பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளானது. (ம-7)

---

**மஹஜன சம்பத**
திகதி 2025.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 5943
A 1 1 4 2 8 5

**அத சம்பத**
A 4 2 8 5
சீட்டிழுப்பு இலக்கம் 0518
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

**சுப தவசக்**
திகதி 2025.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 0059
மகரம் 04 11 23 43
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

**தன நிதானய**
திகதி - 2025.09.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1973
X 12 52 63 71 X
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance
தொலைபேசி : 011 460 7080 / 011 232 4324

**மெகா பவர்**
திகதி 05/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2291
V 06 48 64 65 75
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

**ஜய**
திகதி 2025.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 0211
J 6 2 8 2
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 4185
சீட்டிழுப்பு திகதி | 05.09.2025
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 09 11 65 75
R
தேசிய லொத்தர் சபை

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 1252
கும்பம் 30 32 42 55 கும்பம்
தேசிய லொத்தர் சபை

**சுப்பிரி தன சம்பத**
உத்தியோகபூர்வ முடிவுகள்
05.09.2025 வெற்றி வாரம் 0651 வர்ணம்
ஆங்கில எழுத்து Y
2 2 4 3 0 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,585,998.80
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 2917 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2025.09.05 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 43 63 70 ஆங்கில எழுத்து C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,446,016.00
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா**
திகதி 05.09.2025 வெற்றி வாரம் 5078 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 06 39 69 75 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,439,312.40
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சசிரி**
வெற்றி வாரம் 0763
சீட்டிழுப்பு திகதி 05.09.2025
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 | 30 | 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

**ராசி**
சீட்டிழுப்பு வாரம் 4629 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 05.09.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 20 32 45 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,061,494.80
அபிவிருத்தி லொத்தர் சபை

**கப்ருக**
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 37 04 23 32 54
சுப்பர் இலக்கம்
2093
05.09.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.592,175,865.40
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி ADA KOTIPATHI**
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2743
வர்ணம் :
சீட்டிழுப்புத்திகதி : 2025.09.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,563,660.00
வெற்றி இலக்கங்கள் 04 09 69 70 ஆங்கில எழுத்து C
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் மென்பான மொத்த விற்பனை நிலையம் ஒன்றிற்கு

- கணக்காளர் (Accountant)
- களஞ்சியக்காப்பாளர் (Store keeper)
- விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)

உடன் தேவை.

**077 0777 620, 077 226 9914, 021 221 2161**

(C-3810)

## தவறிவிட்டது

குகநேசன் ஆகிய நான் அளவெட்டியில் இருந்து K.K.S தல்செனை Beach இற்கு ஆட்டோவில் சென்ற போது Id card, Driving Licence, Foreign medicine card, SIM, கண்ணாடி போன்ற பொருட்கள் உள்ளடங்கிய பையானது தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**075 339 7823**

(5334)

## கனடா - வரி இல்லாமல்

### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3812)

- UK 11Kg - 1390/-
- France 11Kg - 2220/-
- Germany 11Kg - 2010/-
- Swiss 11Kg - 2480/-
- Australia 11Kg - 2150/-
- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

**076 663 3199**

(5329)

## காணி விற்பனைக்கு உண்டு

பொற்பதி வீதி, வீதி முகப்புடன் 4 ½ பரப்பு காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் இருபக்க பாதை உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

**075 945 3391**

(5332)

## உடனடி வேலைவாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3812)

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236

v2vacancies@gmail.com

## மணமகள் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, திருவோணம் 3ஆம் பாதம் (2ல் செவ்வாய்) கடையில் பணியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. சைவபோசன மணமகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**077 191 7936**

(1511)

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் திருகோணமலையில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

**076 889 1308**
**077 839 3974**

(1516)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 172/= | Max 10Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 239/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2750/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 188/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 260/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1150/= | |
| 1Kg கடலை | - 378/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |

400g Anchor — Max 01 — 1140/= (~~1260/=~~)



1Kg சன்லைட் பவுடர் — 280/= (~~320/=~~)



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.


(1517)

Happy Supermarket 0777 8080 30

## தென்னிந்திய யாத்திரை

### தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடான யாத்திரை

ஆரம்பம் 10.10.2025 | யாத்திரிகர்:- 10 | நாட்கள் 12 | Amount 250,000



தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனிபகவான், திருநள்ளாறு, நளன் குளத்தின் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**சென்னையின் ஒரு நாள் Shopping**

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

## வட இந்திய தலயாத்திரை

ஆரம்பம் 10.11.2025 | நாட்கள் 12 | Amount 350,000

காசி/வாரணாசி
- விசாலாட்சி சமேத விஸ்வநாதர்
- அன்னபூரணி
- கால பைரவர்
- சங்கடஹர மோட்ச ஆஞ்சநேயர்
- துர்க்கா மந்திர்
- கங்கை ஆரத்தி
- துளசிதாசர் மந்திர்
- சோழியம்மன்
- பாதாள வராகி அம்மன்
- 64 படித்துறை
- கங்கையில் தர்ப்பணம்


அயோத்தி
- ஸ்ரீ ராம ஜென்மபூமி
- சராயு ஸ்நானம்
- அனுமன் மந்திர்
- சீதை பூமியுள் புதையுண்ட இடம்
- மதுரா
- தாஜ்மஹால்
- ஷீரடி சாய் பாபா
- சனி சிங்கனாப்பூர்

திருவேணி சங்கமம்
- கங்கை, ஜமுனா, சரஸ்வதி சங்கம ஸ்நானம்
- பாதாள ஆஞ்சநேயர்
- இராமேஸ்வரம்
- உத்திர கோஷ மங்கை
- திருப்புலானி
- மதுரை மீனாட்சி
- சென்னையில் ஒருநாள் Shopping

- உள்நாட்டு & சர்வதேச விமான பற்றுச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு சமைத்துத் தரப்படும்.
- தண்ணீர்ப் போத்தல் & தேநீர் பழச்சாறு.
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- நுழைவுச்சீட்டுகள்
- இலங்கை சுற்றுலா வழிகாட்டி
- இந்திய சுற்றுலா வழிகாட்டி (தமிழ் & ஹிந்தி தெரிந்தவர்)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
srianganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
Tel: 077-7680102, 077 7362154

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29 - 12 - 1939

விண்ணில் 06 - 09 - 2012

### அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)

ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம்துயரம் அப்பாவே!
விண்ணுலகில் தெய்வமாய்
எமைத் தினமும் வழி நடத்தும் தந்தையே!
அவனியிலே சிறப்பாக எமை
வாழ வைத்த பாசத்தின் சிகரமே!
உமை நினைக்காத நாட்களும்
உள்ளனவோ எமதருமை அப்பாவே!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

41/17, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு.

(1504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.